ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள்	71
உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்	70
ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்	25
தலைமைக் காவலர்கள்	753
நாயக்ஸ்	167
லான்ஸ் நாயக்ஸ்	155
முதல் நிலை காவலர்கள்	569
இரண்டாம் நிலை காவலர்கள்	4,097

Stock of yarn

* 343 *Q.*—THIRU N. DENNIS ; THIRU N. K. PALANISAMY Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the total quantity of yarn lying in stock with the Mills in this State as on date, district-wise ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 31—12—1974-ல் மாவட்ட வாரியாக ஆலைகளிலுள்ள நூல் இருப்பு பின்வருமாறு :—

மாவட்டங்கள்.	180 கிலோ பேல்கள்.
1. கோயம்புத்தூர்	21,134
2. மதுரை	5,403
3. திருநெல்வேலி	4,595
4. இராமநாதபுரம்	5,144
5. செங்கல்பட்டு	1,000
6. சேலம்	2,866
7. திருச்சிராப்பள்ளி	1,474
8. கன்னியாகுமரி	983
9. வடாற்காடு	647
10. தென்னாற்காடு	513
11. தஞ்சாவூர்	1,139
	44,898

திரு. என். டென்னிஸ் : சார், சர்ப்ளஸ் ஸ்டாக் ஏற்படாமல் இருக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், சர்ப்ளஸ் ஆக இருக்கின்றவற்றை கிளியர் செய்ய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அறிய விரும்புவதோடு இந்த வினியோக முறையிலே ஏதாவது மாறுதல் தேவையிருக்கிறதா என்பதை அரசு பரிசீலித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பொதுவாக அகில இந்தியா விலே நூலுக்கு ஏற்பட்ட விலையேற்றமும், அதன் விளைவாக அதை வாங்கு வதிலே ஏற்பட்ட தாமதத்தினுல்தான். ஆகவே, இது நம்முடைய மாநிலத் திற்கு மட்டும் தனியாக ஏற்பட்டதல்ல.

Distribution of yarn

* 344 *Q*.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any new system for the distribution of yarn for the weavers has been introduced from October 1973 ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : 1973-ம் ஆண்டு அக்டோபர் மாத முதல் நூல் வினியோகிக்க புதிய திட்டம் எதும் தொடங்க வில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது நூல் எந்த எந்த அடிப்படையில் நெசவாளர்களுக்கு விநியோகிக்கப் படுகிறது என்கிற விபரத்தை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு முறையிலே உற்பத்தி செய்யப்படுகிற நூல் நம்முடைய கோ - ஆப்டெக்ஸ் கூட்டுறவுத் தலைமை நிலையத்தின் மூலமாக அங்கங்கே உள்ள டெப்போக்கள் மூலமாக ஒவ் வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் தேவையான நூல் வழங்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : நூல் ஆங்காங்கே விநியோகம் செய்வதற்கு கூட்டுறவு சேவா கைத்தறியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டதே அந்தச் சங்கங்கள் மூலமாக நூல் விநியோகிக்கப்படுகிறதா ? அந்தச் சங்கங்களுக்கு ஏதாவது பொறுப்பு அளிப்பதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த வகையிலே இந்தப் பணியை அவர்களிடம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர தனியார் துறையிலே உள்ளவர்கள் நூல் வாங்குவதற்காக சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் தொடங்கப்பட்டிருக்குமாஞல் அவற்றின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற திட்டத்தைத்தான் அவர்கள் குறிப்பிடுகிருர்கள் என்று நினைக்கிறேன். நாம் உற்பத்தி செய்கிற நூலில் முதல் உரிமை கூட்டுறவு நெசவாளர்களுக்கு வழங்கப் படுகிறது. மீதி வாய்ப்பு அதிலே இருக்குமாஞல் சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடீஸ் மூலமாகக் கொடுக்கலாமென்று முடிவெடுத்தோம். சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை மேலும் வளர்க்கின்ற வாய்ப்புகளை நாம் உருவாக்கியாகவேண்டும்.